**கூடுதல் சார்பு நீதிமன்றம், பழனி, திண்டுக்கல் மாவட்டம்.**

**முன்னிலை : திருமதி. கா. பாரதி, எம்.எல்.,**
**கூடுதல் சார்பு நீதிபதி,**
**பழனி.**

**2026 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 26 ஆம் நாள் வியாழக்கிழமை**

**(திருவள்ளுவராண்டு 2056 ஸ்ரீவிசுவாவசு வருடம் பங்குனி மாதம் 12 ஆம் நாள்)**

**அ.வ.எண் : 160/2025**

**[CNR No : TNDG07 - 000593 – 2025]**

**R. கார்த்திகேயன் --- வாதி**

**எதிர்**

**M. ஜெகநாதன் --- பிரதிவாதி**

இந்த வழக்கானது 30.07.2025 ஆம் தேதியன்று இந்நீதிமன்ற கோப்பிற்கு எடுக்கப்பட்டு 05.03.2026 ஆம் தேதியன்று என் முன்னர் இறுதி விசாரணைக்காக வந்தபோது, வாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர்கள் திருவாளர்கள் R. சுப்பிரமணியன் மற்றும் T. ரமேஷ் ஆகியோர் முன்னிலையாகியும், பிரதிவாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திருவாளர் T. தண்டபாணி அவர்கள் முன்னிலையாகியும், பின்னர் எதிர்வழக்குரை தாக்கல் செய்யாததாலும், திறந்த நீதிமன்றத்தில் அழைத்தும் ஆஜராகாததாலும் தோன்றாத்தரப்பினராக இருந்தும், வாதி தரப்பு வாதம் கேட்கப்பட்டும், வழக்கு ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டும், இதுநாள் வரை இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து வந்து இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்,

**தீர்ப்புரை**

தாவாத் தொகை ரூ.4,49,600/–ம் வாதிக்கு, பிரதிவாதியால் கிடைக்கும்படி கோரியும், மேற்படி தாவா அசல் தொகை ரூ.4,00,000/–க்கு தாவாத் தேதி முதல் 12 சதவீதம் பின்வட்டியும், வழக்கின் செலவுத் தொகை கோரியும் மற்றும் இதர பரிகாரங்கள் கோரியும் வாதியால் இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**<u>2. வாதி தரப்பில் தாக்கல் செய்யபட்ட வழக்குரையின் சுருக்கம்–</u>**

2.1. வாதியிடம் பிரதிவாதி கடந்த 15.07.2024 அன்று அவரது அவசர நிமித்தம் மற்றும் கடும்ப மற்றும் வேறு கடன் தீர்க்கும் செலவுகளுக்காகவும் கடனாக ரொக்கம் ரூ.4,00,000/– பெற்றுக்கொண்டு, அதற்கு மாதம் ஒன்றுக்கு ரூ.100/–க்கு ரூ.1/– வட்டி வீதம் சேர்த்து கூடிய வட்டியும், அசலையும் சேர்த்து வாதி வேண்டும் போது வாதிக்கோ அல்லது வாதியின் உத்திரவு பெற்ற நபர்களுக்காவது ரொக்கமாய் திருப்பிச் செலுத்துவதாகவும் கண்டு மேற்படி தேதியில் கடனுறுதிச்சீட்டை வாதியின் வீட்டில் வைத்து எழுதிக் கொடுத்துள்ளார். பின்னிட்டு வாதி கடனுறுதிச்சீட்டின்படி ஏற்படும் அசல், வட்டித் தொகைகளை செலுத்தும்படி பிரதிவாதியிடம் பலமுறை நேரில் சந்தித்து கேட்டும் பிரதிவாதி யாதொரு தொகையும் செலுத்தாமல் வேண்டுமென்றே வீண் காலங்கடத்தி தாவா கடனை மோசடி செய்யும் எண்ணத்துடன் செயல்பட்டு வருகிறார். மேலும் வாதி கடந்த 16.07.2025 அன்று தாவா நோட்டின் அசல் மற்றும் வட்டித் தொகைகளை திருப்பிச் செலுத்தும்படி அவரது வழக்கறிஞர் மூலம் பிரதிவாதிக்கு அறிவிப்பு அனுப்பியுள்ளார். மேற்படி அறிவிப்பை பிரதிவாதி பெற்றுக்கொள்ள மறுத்து கடந்த 19.07.2025 அன்று திரும்பி வந்துவிட்டது. ஆகவே தாவா கடனுறுதிச்சீட்டுக்குண்டான தொகையைப் பெற வாதியால் இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3. ஏற்கனவே குறிப்பிட்டுள்ளதுபோல் பிரதிவாதி தரப்பில் வழக்கறிஞர் முன்னிலையாகியும், பின்னர் எதிர்வழக்குரை தாக்கல் செய்யாததாலும், நீதிமன்றத்தில் அழைத்தும் ஆஜரின்மையால் தோன்றாத்தரப்பினராக இருந்து வருகிறார்.

**<u>4. இருதரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்களின் விவரம்</u> :–**

இவ்வழக்கில் வாதி தரப்பில் வாதி திரு. கார்த்திகேயன் வா.சா.1 ஆகவும், திரு.நாகராஜன் என்பவர் வா.சா.2 ஆகவும் விசாரிக்கப்பட்டு, வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.3 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. பிரதிவாதி தரப்பில் சாட்சி விசாரிக்கப்படவில்லை. சான்றாவணங்கள் ஏதும் குறியீடு செய்யப்படவில்லை.

5. இந்த வழக்கில் தீர்மானிக்கப்படவேண்டிய பிரச்சனை என்னவென்றால், வாதி கோரும் பரிகாரம் வாதிக்கு கிடைக்கத்தக்கதா? இல்லையா? என்பதேயாகும்.

<u>6. வாதி தரப்பு வாத சுருக்கம் :–</u>

6.1. வாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் தனது வாதத்தில், பிரதிவாதி வாதிக்கு செலுத்த வேண்டிய அசல் ரூ.4,00,000/–த்திற்கு தாவா தாக்கல் செய்த தேதி முதல் 12 சதவீத வட்டி மற்றும் பின்வட்டி செலவுத் தொகையுடன் பிரதிவாதி செலுத்தக்கோரி, வாதி தரப்பில் இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

6.2. வாதி தரப்பில் வாதி/கார்த்திகேயன் வா.சா.1 ஆக விசாரணை செய்யப்பட்டு, வாதி தரப்பில் வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.3 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. மேலும் வாதி தனது வழக்கை நிரூபிக்க 3–ம் தரப்பினரான திரு.நாகராஜன் என்பவரை வா.சா.2 ஆக விசாரித்துக்கொண்டுள்ளார். வாதி கடன் தொகையை திருப்பிச் செலுத்துமாறு அனுப்பிய எழுத்துப்பூர்வ கோரிக்கைக்கு பிரதிவாதி தரப்பில் எந்தவிதமான பதில் மற்றும் எதிர்ப்பு தெரிவிக்கவில்லை. வாதியின் வழக்கினை பொய்ப்பிக்கக் கூடிய வகையில், பிரதிவாதியை திறந்த நீதிமன்றத்தில் அழைத்தும் ஆஜரின்மையால் தோன்றாத்தரப்பினராகியுள்ளார்.

6.3. பிரதிவாதி வாதியின் வழக்கை பொய்பிக்கும் வகையில் எந்த ஒரு வாய்மொழி சாட்சிய மற்றும் சான்றாவணங்களை முன்னிலைப்படுத்தி தன் தரப்பில் எவ்வித எதிர்ப்பினையும் நிரூபிக்க முன்வரவில்லை. வாதியின் தரப்பில் முன்னிலைப்படுத்தப்பட்ட வாய்மொழி சாட்சியம் மற்றும் சான்றாவணங்கள் மறுக்கப்படக்கூடியதாக இல்லை என்ற காரணத்தின் அடிப்படையில் வாதியின் வழக்கு உண்மை என்பது இந்நீதிமன்றம் முன்பு நிரூபிக்கப்பட்டுள்ளதால், பிரதிவாதி, வாதியிடம் பெற்ற கடன் தொகையை திரும்ப செலுத்தக் கடமைப்பட்டவர் என்ற அடிப்படையில் வாதி கோரிய பரிகாரம் வழங்கத்தக்கது என முடிவு கண்டு வாதிக்கு ஆதரவாக தீர்ப்பு வழங்க வேண்டி வாதிட்டார்.

**7. தீர்வு காணப்படவேண்டிய பிரச்சனைக்கான பதில் :-**

7.1. வாதியின் தரப்பில் முன்னிலைப்படுத்தப்பட்ட வழக்குரை, சாட்சிய சான்றாவணங்கள் மற்றும் வாதுரை கருத்தில் கொள்ளப்பட்டது. பிரதிவாதி வாதிக்கு செலுத்த வேண்டிய அசல் ரூ.4,00,000/-க்கு தாவா தாக்கல் செய்த தேதி முதல் 12 சதவீத வட்டி மற்றும் பின்வட்டி செலவுத் தொகையுடன் பிரதிவாதி செலுத்தக்கோரி, வாதி தரப்பில் இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

7.2. வாதி தனது வழக்கை நிரூபிக்கும் வகையில் வாதி திரு.கார்த்திகேயன் வா.சா.1 ஆக விசாரணை செய்யப்பட்டு, வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.3 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. வா.சா.ஆ.1 ஆவணத்தைப் பரிசீலிக்கையில், வாதியிடம், பிரதிவாதி கடந்த 15.07.2024 அன்று ரூ.4,00,000/-ஐ பெற்றுக்கொண்டு கடனுறுதிச்சீட்டில் சாட்சிகள் முன்னிலையில் கையொப்பம் செய்து கொடுத்துள்ளார் என்பது அறிய முடிகிறது. மேலும் வாதி தனது வழக்கை நிரூபிக்க கடனுறுதிச்சீட்டை எழுதியதும், சாட்சியுமாக திரு. நாகராஜன் என்பவரை வா.சா.2 ஆக விசாரித்துக்கொண்டுள்ளார். அவர் தனது சாட்சியத்தில் வாதியின் வழக்கை ஒத்துரைத்து சாட்சியம் அளித்துள்ளார்.

7.3. வாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட சாட்சிய, சான்றாவணங்கள் இந்திய சாட்சிய சட்டத்தில் சொல்லப்பட்ட சட்ட வரையரைக்கு உட்பட்டு ஏற்புடையதாக அமைந்துள்ளது. வாதியின் எழுத்துப் பூர்வ கோரிக்கையை எதிர்த்து அதை பொய்ப்பிக்கும் வகையில் எந்தவொரு நடவடிக்கையும் மேற்கொள்ளாமல், பிரதிவாதி நீதிமன்றத்தில் ஆஜராகாமல் தோன்றாத் தரப்பினராகி உள்ளார்.

7.4. பிரதிவாதி வாதியின் வழக்கை மறுத்து வாதிக்கு எதிராக எந்த ஒரு சாட்சிய சான்றாவணங்களை முன்னிலைப்படுத்தி பிரதிவாதி நீதிமன்றத்தின் முன்பு நிரூபிக்க முன்வரவில்லை. வாதியின் வழக்கை பொய்பிக்கும் வகையில் பிரதிவாதி எந்த ஒரு சட்ட நடவடிக்கை மற்றும் எதிர்ப்பை தெரிவிக்காத காரணத்தினால், வாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள சாட்சிய சான்றாவணங்கள் மறுக்கபடக்கூடியதாகவோ அல்லது ஏற்றுக் கொள்ளக்கூடாததாகவோ இல்லை என்ற காரணத்தின் அடிப்படையில் பிரதிவாதி பெற்ற கடனை ஒப்புக் கொண்டுள்ளார் என்பதாகவே இந்த நீதிமன்றம் கருதுகிறது.

7.5. வாதியின் வழக்கின் பொருண்மைக்கு எதிராக யாதொரு வாதத்தினையும் பிரதிவாதி முன்வைத்து நிரூபிக்க முன்வரவில்லை. இந்நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்டுள்ள வாய்மொழி சாட்சியம் மற்றும் சமர்பிக்கப்பட்டுள்ள அசல் ஆவணங்களின் உண்மை தன்மையினை பிரதிவாதி பொய்ப்பிக்கத் தவறியுள்ள காரணத்தின் அடிப்படையில் இந்திய சாட்சிய சட்டப்பிரிவு 114(g)–ன் அனுமானம் வாதிக்கு ஏற்புடையதாக கருதுவதன் அடிப்படையில் பிரதிவாதி, வாதியிடம் பெற்ற கடன் தொகையை திரும்ப செலுத்தக் கடமைப்பட்டவர் என்பதாகவே இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

இறுதியாக இவ்வழக்கு அனுமதிக்கப்பட்டு, பிரதிவாதி, வாதிக்கு கடன் தொகையான ரூ.4,49,600/–யையும், அசல் தொகையான ரூ.4,00,000/–க்கு தாவா தாக்கல் செய்த தேதியிலிருந்து தீர்ப்பாணை தேதி வரை 9 சதவீதவட்டி செலுத்த வேண்டுமென்றும், தீர்ப்பாணை தேதியிலிருந்து தொகை வசூலாகும் தேதி வரை 6 சதவீதம் பின்வட்டி செலுத்த வேண்டும் என்றும் செலவுத் தொகையுடன் தீர்ப்பளிக்கப்படுகிறது.

இந்த தீர்ப்பு என்னால் சுருக்கெழுத்தருக்கு நேரிடையாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை திருத்தம் செய்யப்பட்டு 2026 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 26 ஆம் நாள் இந்நீதிமன்றத்தில் தீர்ப்பு அவையறிய பகரப்பட்டது.

K BHARATHI

Digitally signed by K BHARATHI
Date: 2026.03.26 06:00:30 +0530

கூடுதல் சார்பு நீதிபதி,
பழனி.

| வாதி தரப்பு சாட்சி– | | |
|---|---|---|
| வரிசை எண். | | சாட்சியின் பெயர் |
| வா.சா.1 | : | திரு. கார்த்திகேயன் – (வாதி) |
| வா.சா.2. | : | திரு. நாகராஜன் |

**வாதி தரப்பு சான்றாவணங்கள்–**

| **வரிசை எண்** | **நாள்** | **ஆவணப்பெயர்** | **ஆவணத் தன்மை** |
|---|---|---|---|
| வா.சா.ஆ.1. | 15.07.2024 | வாதிக்கு, பிரதிவாதி ரூ.4,00,000/–க்கு எழுதிக்கொடுத்த கடனுறுதிச்சீட்டு | அசல் |
| வா.சா.ஆ.2. | 16.07.2025 | வாதி, பிரதிவாதிக்கு வழக்கறிஞர் மூலம் அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பு | அலுவலக நகல் |
| வா.சா.ஆ.3. | 19.07.2025 | மேற்படி அறிவிப்பை பிரதிவாதி பெற்றுக்கொள்ள மறுத்து திரும்பி வந்த கவர் | அசல் |

**பிரதிவாதி தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள் :–** இல்லை

K BHARATHI
Digitally signed by K BHARATHI
Date: 2026.03.26 06:00:39 +0530

**கூடுதல் சார்பு நீதிபதி,**
**பழனி.**

**கூடுதல் சார்பு நீதிமன்றம், பழனி**
அ.வ.எண்.160/2025
தெளிவு/வரைவு தீர்ப்புரை
நாள் – 26.03.2026